ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

21

# நற்றிணையில் மலர்கள் பற்றிய உவமைகள்

**முனைவர் து.நீலாதேவி,**
**உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி – 02**
**dneelatamil@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

மலரைக் கண்டு மயங்காத மனிதர் இல்லை. கவிஞர்கள் மலர்களை உவமையாக உருவகமாக வேண்டும் வண்ணம் எல்லாம் பாடி மகிழ்வர். மலர்களைப் பாடாதவன் கவிஞன் இல்லை. இனிமையின் எல்லைக்கு மலர்தரும் தேன் தான் அளவுகோல். அதனால் தான் சுவை மிக்க மாங்கனியைத் தேமாங்கனி என்றனர். மலர் என்பது ஒரே மலரின் மிகுதியையும் வேறுபட்ட மலர்களின் கூட்டத்தையும் குறிக்கும் என்பதை அறியலாம். நற்றிணையில் மலர் எவ்வாறு வழங்கப் பெறுகிறது என்பதையே இவ்வியலில் எடுத்துரைக்கிறது.

**திறவுச்சொற்கள்:** அவிழ் –மொட்டு, அரும்பு –மலர், சேய்-குழந்தை, அரிவை –பெண், உளைக் களம்-கொளைக் களம்

**முன்னுரை**

சுவை மிக்க மாங்கனியைத் தேமாங்கனி என்றனர். தேன் சொட்டும் பலா என்றனர்.

மழலையை மலர் என்றனர். அது அதன் வாழ்க்கையின் மலரும் நிலை என்பதால் மட்டுமன்று. அதன் மேனியும் உருவும், மொழியும் மெல்லிய இன்பத்தை நல்கி அனைவரையும் கவர்வதாலும் என்பர்எல்லார்க்கும் காட்டாற்று வெள்ளமாகவும், கட்டுத்தறி முறித்து ஓடும் களிற்றின் செயலாகவும், காட்சி அளிக்கும் காமத்தைக் கூட மலரோடு ஒப்பிட்டு, மலரினும் மெல்லியது காமம் என்று பாடி காமத்தின் நுட்பத்தையும், சிறப்பையும் அனைவருக்கும் விளக்குபவர் வள்ளுவர். இன்றும் பெண்ணை ஆயிரம் மலர் என்றும், கோடி மலர் என்று பாடி மகிழ்கின்றனர்.

**நற்றிணையில் மலர்கள்**

தலைவன் ஒருவன் வேட்டம் வேண்டி கானில் கால்கடுக்க ஓடி வருகிறான். பள்ளத்தை நாடி ஓடும் வெள்ளம் போல் கள்ளமற்ற உள்ளமுடையாள் ஒருத்தி துணை துறந்து அவன் துள்ளி வருகிறாள். மின்னலென இருவர் கண்களும் ஒன்றை ஒன்று தாக்குகின்றன. இருபுறத்திலிருந்து ஓடி வந்த வெள்ளம் நடுநின்;ற குழியில் வீழ்ந்து கலத்தல் போல இருவரும் வேறுவேறு என்ற நிலை மறந்து ஒன்றுபடுகின்றனர். செம்புலப் பெயல் நீர் போல் கலந்து மகிழ்ந்தனர். அதன்பின் தலைவன்.

**'அல்குபடர் உழந்த அரிமதர் மழைக்கண்**
**பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல்**
**திருமணி புரையும் மேனி மடவோள்**
**யார் மகள் கொல்"**

என்று தன் நெஞ்சிடம் வினவுகிறான். இயற்கை புணர்ச்சிக்குப் பின் என்ன செய்தோம் என்று தலைவி வருந்துவதை முதலடியும், தழையோடு கூடிய பல பூக்களையே தாங்க முடியாது வருந்தும் அவளின் உடலின் மென்மையை இரண்டாம் அடியும் அவளின் மேனி அழகையும் இளமையையும் மூன்றாம் அடியும் விளக்கும். இப்பகுதியில் வரும் பல்பூ என்பதும் பன்மலர் என்பதும் ஒன்றுதான். இதில் குறிக்கப் பெற்ற பூக்கள் ஓரினப் பூக்களா பல்லினம் கலந்த பூக்களா என்பது தான் தெளிவாகவில்லை.

அடுத்து தோழிக் கூற்றாக வரும் ஒரு பாடலில் பல்வகை பூக்களைச் சுமந்து வரும் ஒரு காட்டாற்றின் காட்சி கவின் பெற வந்துள்ளதைக் காண்போம். தலைவனும், தலைவியும் இயற்கை புணர்ச்சிக்குப் பின் பகற்குறியில் கண்டு களித்துப் பிரிகின்றனர். இந்நிலையில் தலைவியின் தோற்றப் பொலிவையும் பிற செயல்களையும் கண்டு தலைவியை இல் செறித்தனர். வழக்கம் போல் தலைவியைக் கண்டு வரும் தலைவன் வறிதே திரும்ப வேண்டும் என்கிறாள் தோழி. தலைவனின் நாட்டு வளமையைக் கூறிய பின்,

**'இன்முசுப் பெருங்கலை நன்மேயல் ஆரும்**
**பல் மலர்க் கான்யாற்று உம்பர்க் கருங்கரை**
**கடும்பு ஆட்டு வருடையொடு தாவன உகளும்**
**பெருவரை நீடில் வருகுவன்"**

**என்று தன் நாட்டில் வளம் பாடுகிறாள்.**

அவள் நாட்டில் பாய்ந்தோடும் கானாற்றின் இருகரையிலும் வண்ணமலர்கள் பூத்துக்குலுங்கும் மரங்களும், அவற்றின் தாவி வளரும் கொடிகளும், அருகில் செழித்து நிற்கும் செடிகளும் பூத்துப் பொலிவுற்று நிற்கின்றன. அப்பூக்கள் ஆற்றில் விழுவதால் பல வண்ணப் பூக்களைச் சுமந்த வண்ணம் ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது.

அதன் அருகில் உள்ள தோட்டத்தில் காவலின்மையால் எளிதாக குரங்குகள் தங்கள் வயிறார உண்டு உறங்குகின்றன. மலைப் பக்கம் என்றால் மான் கூட்டமும், மலையாடுகளும், மேயலை மறந்து ஆடித்திரியும் என்பதாகப் பாடுகிறார். ஆற்றின் ஓட்டத்தில் மலரும் சேர்ந்து அழகு பெற நீந்தி வருகின்றன என்கிறாள். இங்கு வரும் மலர் பல்வேறு வகைப்பட்ட மலர்களின் கூட்டத்தைச் சுட்டி நிற்கின்றது. இனி தலைவன் கூற்றாக வரும் நற்றிணை 242இல் வரும் மலர் நல்கும் காட்சியைக் காண்போம். இல்லறம் இனிதே நடத்தும் தலைவன் பொருள் ஈட்டிப் புகழ் ஈட்டக் கருதியவனாய் கார் காலத்தே வருவதாகத் தலைவியிட் கூறிப் பிரிகிறான். வினைமுற்றி வீடு திரும்பும் போது கார் விரைந்து வந்து விட்டதே நீயும் விரைவாகச் செல் என்கிறான் தன் பாகனிடம், காரின் வருகையைப் பாடும் போது,

**'இலையில் பிடவம் ஈர்மலர் அரும்பப்**
**புதலிவர் தளவம் பூங்கொடி அவிழப்**
**பொன்எனக் கொன்றை மலர மணிஎனப்**
**மலர்க் காயாம் குறுஞ்சினை கஞலக்**
**கார்தொடங் கின்றே காலை"**

கார்காலந் தொடங்கியது. இலைகளோ இல்லாத பிடவ மரம் முழுவதும் பூக்களைப் பரப்பியதைப் போன்ற வண்ணமுற பூத்துப் பொலிந்தது. அருகில் உள்ள குத்துச்செடிகளையெல்லாம் பற்றிப் படர்ந்திருக்கும் முல்லையின் அழகிய கொடிகள் எல்லாம் பூக்களால் பொலிவுறவும் கோத்தது போல் கொன்றை மரமானது பொன் வண்ணப் பூக்களால் காருக்குக் கட்டியம் கூறவும் காயா மரமானது வண்ண மணியோ என மருள வைக்கும் மிகுதியான மலர்களைத் தன் சிறுகிளைகளில் மலரவிட்டு மகிழ்ந்து நிற்கும் காட்சியும் காரின் தொடக்கத்தைப் பறை சாற்றுகின்றன என்கிறான்.

ஒன்றல்ல காரில் கட்டவிழும் மலர்கள் பலவும் பூத்தமையால் இனியும் காலந்தாழ்த்தக் கூடாது விரைவாகச் செல்ல வேண்டும் என்கிறான். இச்செய்யுளில் பல மலர்கள் கூறப்பட்டாலும் மலர் காயா மலர்கள் மட்டும் சுட்டி நின்றது.

மேலும் தோழிக் கூற்றாக வரும் நற்றிணைப் பாலில் வரும் மலர் அழகைக் காண்போம். மாலை நேரம் தோழியரோடு அருவியில் ஆடிக்களிக்கின்றாள் தலைவி. மண்ணுலகம் மகிழத் தன் பல்கதிரால் ஒளியூட்டிய கதிரவனும் களைப்புற்றுக் கதிர் மடக்கி குடக்குன்றில் பள்ளிசேர்கிறான். இதைக் கண்ணுற்ற பெண்கள் வீட்டை நோக்கி விரையவும் தலைவி மட்டும் தயங்கிய வண்ணம் தளர்நடை பயில்கிறாள். சற்றுத்தள்ளி நிற்கிறாள் உடன் வரும் தோழி,

**'ஓரை மகளிரும் ஊரெய் தினரே**
**மலர் நறும்பொழில் பழிச்சியாம் முன்**
**சென்மோ சேய் இழை என்றனம்"**

என்று கூறுகிறாள். இரவோ வந்தது. உன்னுடன் நீராடியோர் இருளுக்கு அஞ்சி கூந்தலைக் கூட காட்டாது துவட்டாது நீர்வடிய விட்ட வண்ணம் நெடுநடையாய் நடந்து வீட்டை அமைந்தனள். நாம் இனி இங்கிருத்தல் அழகல்ல. வழி நெடுக உள்ள செழுமை சேர் பொழில்களில் மாலையில் மலரும் மலர்கள் அனைத்தும் மணம் பரப்பி மலர்ந்து கொலுவிருக்கும் காட்சியைக் கண்ட வண்ணம் மெதுவாகப் போகலாம் வா எனத் தோழி தலைவியை விளிக்கிறாள், ஈங்கு மலர் சோலையில் பூத்துக் கிடக்கும் அனைத்துப் பூக்களையும் சுட்டி நின்றது.

அடுத்து மலர் புன்னை மலர்களை மட்டும் குறித்து நிற்றரைக் காண்போம். கடற்கரையோரம் பரந்த மணல் வெளியில் புன்னை மரங்கள் நிரம்ப உள்ளன. கொத்துக் கொத்தாக முத்துக்களை அடுக்கியது போன்று அரும்பி மலரும் புன்னைப் பூக்களை எளிதாகப் பறித்துச் சூடிக் கொள்கின்றனர்.

புன்னை அருகே விளையாட்டயரும் இளம் பெண்கள். வேண்டாம் என விடுத்த மீதிப் பூக்கள் காய்த்து காதில் தொங்கும் குழையாட்டம் காற்றில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. அம்மரத்தில் வலிய பூவைக் கொண்டாலும் காய்க்க மறுக்காத புன்னை அரும்போ அரலைத் தோற்றுவித்தோடும் நீரில் தோன்றும் குமிழியைப் போன்றது. அதன் காயோ நெய் நிரம்பியது என்று கூறுகிறார்.

**'படுகாழ் நாறிய பராரைப் புன்;னை**
**அடுமரன் மொக்குகளின் அரும்பு வாய் அவிழப்**
**பொன்னின் அன்ன தாதுபடு மலர்**
**சூடுநர் தொடுத்த மிச்சில் கோடுதொறும்**
**நெய்கனி பசுங்காய் தூங்கும் துறைவனை"**

**புன்னை மரம் சொல்லோவியமாக கருத்தில் என்ற பாடல் வரியில் நிற்கிறது.**

மிகுதியைப் பலவென்றும் குறைவானதைச் சிலவென்றும் கொள்ளலாம். இதுவரை மலரைப் பார்த்தோம். சிலவாகிய மலராக இருந்தாலும், மலர்மலர்தானே. அதன் அழகையும் பார்ப்போம். இக்காட்சி நற்றிணை 42-இல் வருகிறது. பெண்கள் தலை நிறையப் பூவை சூடிக் கொள்வதில் ஆர்வம் மிக்கவர்கள் தாம். இருப்பினும் சில நேரங்களில் மிகுதியான பூவைச் சூட அவர்கள் விரும்புவதில்லை. குளிர் காலங்களிலும் கணவனைப் பிரிந்திருக்கும் காலங்களிலும் வழக்கத்திற்கு மாறாக சில மலர்களைச் சூடிக்கொள்வர். நற்றிணைத் தலைவன், தன்னைப் பிரிந்திருக்கும் தலைவி எப்படி இருப்பாள் என்பதையும் கண்டதும் அவள் நிலை எப்படி மாறும் என்பதையும் கற்பனை செய்து பார்க்கிறான். அவன் கற்ப்i பின்வருமாறு அமைகிறது.

**'மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்**
**சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய**
**அந்நிலை புகுதலின் மெய் வருத்துறாஅ**
**அவிழ்பூ முடியினள் சுவை இய**
**மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே"**

எப்போதும் தம்மை அழகுறுத்துவதில் ஆர்வமுடைய பெண்கள் கூட கணவனைப் பிரிந்து வருந்தும்போது அழகுப்படுத்தவும் அவர்கள் விரும்புவதில்லை. தலைவன் வருகையைக் கேட்டதும் மிக விரைவாக தலையைக் கழுவுகிறாள். கூந்தலை அள்ளிச் செருகினாள். ஓடோடிச் சென்று கணவனைக் காண்கிறாள். ஓடும்போது அவசரத்தில் அள்ளி முடித்த கூந்தல் அவிழ்ந்து அவள் ஓட்டத்தைத் தடுக்கிறது. எதைப் பற்றியும் கவலைப்படாது ஓடிச் சென்று கணவனை மார்போடு அனைத்து மகிழ்கிறாள். இங்கே சின் மலர் வந்து பெண்களின் இயல்பை மிகவும் தெளிவாக விளக்குகின்றது.

**நற்றிணையில் மலர்கள் பற்றிய உவமைகள்**

சங்க இலக்கியங்களில் இயற்கைக் காட்சிகளை வர்ணிக்கும் போது மலர் பற்றிய உவமைகள் காணப்படுகின்றன.

**வேங்கை மலர்**

வேங்கை மலரைப் பற்றிப் பாடிய புலவர்கள் பலர். அவர்களில் கபிலர் வேங்கை மரத்திலிருந்து மலர்கள் கீழே வீழும் காட்சியினைக் கூறும் போது, கொல்லன் தன் உலைக் களத்தில் காய்ச்சிய இரும்பை அடிக்கும் போது சிதறும் பொறி எவ்வாறு உள்ளதோ அதுபோல மலர்கள் விழுகின்றன என்பதனை,

**'............கொல்லன்**
**ஏறிபொன் பிதிரின் சிறுபல் காஅய**
**வேங்கை வீஉகும் ஓங்கு மலைக்காட்சி"**

என்ற வரிகளின் மூலம் சிறப்பாக உவமித்துக் காட்டியுள்ளார்.

**நெய்தல் மலர்**

நெய்தல் மலரைப் பற்றிக் குன்றியனார் கூறும்போது அழகிய நீலமணிகளைக் குவியலாக விரிந்து பரப்பினால் எவ்வாறு அழகாக இருக்குமோ அது போல நெய்தல் மலர்கள் மலர்ந்துள்ளன என்பதனை,

**'ஆய்மணி பொதி அவிழ்ந்தாங்கு நெற்தற்**

**புல்இதழ் பொதிந்த பூத்தப மிதக்கும்"**

என்று தலைவன் செல்லும் வழியில் நெய்தல் மலர்கள் மலர்ந்துள்ள காட்சியைச் சிறப்பான உவமை மூலம் வர்ணித்துள்ளார்.

**கொன்றை மலர்**

கொன்றை மலர்கள் மலர்ந்து அழகாக இருக்கும் காட்சியினைக் கண்ட மதுரை மருதன் இளநாகனார், பாலைத் திணையில் வரும் ஒரு பாடலில் கூறும் போது,

**'இழையணி மகளிரின் விழைதகப் பூத்த**

**நீடுசுரி இணர சுடர்வீக் கொன்றை"**

என்ற வரிகள் மூலம் விளக்கியுள்ளார். அதாவது. மகிழ்ச்சியாக உள்ள பெண்கள் பொன்னாலான அணிகலன்களை அணிந்து கொண்டால் எவ்வாறு அழகாக இருக்குமோ அதுபோல நீண்ட பூங்கொத்துக்களாகக் கொன்றை மலர்கள் உள்ளன என்று நயம்படக் கூறியுள்ளார்.

**தாமரை**

**தலைவன் தலைவியின்பால் அன்பு வைத்தான்.**

**'தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**

**சாந்தின் தொடுத்த தீந்தேன் போல"**

எனப் பாடுகின்றார். தாமரையின் தண்ணிய மகரந்தத்தையும் சந்தனத்தின் தாதினையும் ஒன்று கலந்து தேனிறால் வைத்தாற்போன்று தலைவனுள்ளமும் தலைவியுள்ளமும் ஒன்று கலந்தது எனப் பாடிய கவிவலவரின் திறம் பாராட்டிற்கு உரியது.

**'விளக்கின் அன்ன சுடர்விடு தாமரை"**

என்று தாமரை இலையையும் பரணர் ஒப்புக்காட்டி விளக்கிய நயத்தினையும் நற்றிணை அழகுறக் காட்டுகின்றது.

**தாழை**

நெய்தல் நிலக் கருப்பொருளாகிய தாழையினைக் கூறும் போது, இறால்மீனின் முதுகு போன்ற சொரசொரப்பு அமைந்த பெரிய அடியினையும் சுறாமீன்கள் முகத்தில் நீண்டிருக்கும் கொம்பு போன்ற முட்களையும், களிற்றுயானையும் கொம்பு போன்ற அரும்பினையும் உடையது.

**அரும்பு மலர்**

'இருங்கழி பொருத ஈரவெண் மணல்

மாக்கொடி அரும்பின் மாஇதழ் அலரி"

அரும்புமலர் கடற்கரை ஓரங்களிலும், கரைகளிலும் படர்ந்திருக்கும் என்பதையும், குதிரையின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணியைப் போன்ற வடிவம் கொண்டது.

**அதிரல்**

வெண்மை நிறமாகவும் மொட்டுக்களின் மீது மெல்லிய வரிகளைக் கொண்டும் வளரும் அதிரல் மலரினைக் காட்டு மல்லிகை என்றும், புனலிக்கொடி என்றும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதனை,

**'முதிரா வேனில் எதிரிய அதிரல்"**

ISSN:2582-9599



இளவேனிற் காலத்தில் மிகுதியாக மலரும் பூவாகவும், கூர்மையான நீட்சியையுடைய மொட்டினை உடைய பூவாகவும் அதிரல் காட்டப்படுகின்றது.

**காந்தள்**

காந்தள் மலரின் காட்சி நுனி சிவந்திருக்கும் காந்தள் விரியும் போது இரத்தம் தோய்ந்த யானைத் தந்தம் போலக் காட்சி அறிக்கின்றன. இதனை,

**'கொன்ற யானைக் கோடு கண்டுஅன்ன**

**செம்புடைக் கொழுமுகை அவிழ்ந்த காந்தள்"**

என்ற வரிகள் தெரிவிக்கின்றன.

நற்றிணையில் இடம்பெறும் மலர்கள் தலைவியின் உறுப்புகளுக்கு உவமைகளாக கூறப்பட்டுள்ளது. மனிதன் அகமலர்ச்சிக்கும், முகமலர்ச்சிக்கும் மலரை ஒப்பிடுகின்றனர். இறைவனின் படைப்புகளில் அரிய படைப்பு மலர்கள் என்று சொல்லலாம். மலரில் உள்ள தேனை உண்ணும் வண்டு மயங்கி இருப்பது போல தலைவன் அருகில் எப்போதும் இருக்க தலைவி விரும்புகிறாள்.

**அடிக்குறிப்புகள்**

1. நற்றிணை எச்.வேங்கடராமன் ப.17 பா.எ.8
2. மேலது ப.219 பா.எ.119
3. மேலது ப.439 பா.எ.242
4. மேலது ப.720 பா.எ.398
5. மேலது ப.504 பா.எ.278
6. மேலது ப.80 பா.எ.42
7. மேலது ப.26 பா.எ.13
8. மேலது ப.433 பா.எ.239
9. மேலது ப.545 பா.எ.302
10. மேலது ப.2 பா.எ.1
11. மேலது ப.559 பா.எ.310
12. மேலது ப.264 பா.எ.145
13. மேலது ப.610 பா.எ.337
14. மேலதுப. 532பா.எ.294

**பார்வை நூல்கள்**

முனைவர் இரா. மோகன் சங்க இலக்கியம்
பத்துப்பாட்டு தொகுதி 1
திருவள்ளுவர் கணிப்பொறி அச்சகம்
தஞ்சாவூர் 07.
(முதல் பதிப்பு – ஏப்ரல் 2004)

முனைவர் வி. நாகராசன் சங்க இலக்கியம்
பத்துப்பாட்டு தொகுதி 2 நியூ செஞ்சுரி
புக்ஹவுஸ் அம்பத்தூர் சென்னை 98.
(முதல் பதிப்பு ஏப்ரல் 2004).